பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 09 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
2. தமிழக காவல்துறையினர் என்கவுண்டர் நடத்துவதை தவிர்த்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.
3. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சீரான வளர்ச்சியை உறுதி செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. மாநில அரசு மின் கட்டணம், சொத்து வரி, உள்ளிட்டவற்றை அடிக்கடி உயர்த்தி மக்களுக்கு சுமையை ஏற்படுத்தி வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.
5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

<u>---- *இனி விரிவான செய்திகள்* ---</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**[]<<<>>>[]**

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

சென்னை தூர்தர்ஷன் வளாகத்தில் அன்னையின் பெயரில் ஒரு மரம் வளர்ப்போம் இயக்கத்தில் பங்கேற்று மரக்கன்றை நட்ட பின்

செய்தியாளர்களிடம் பேசிய அவர், உள்கட்டமைப்பை மேம்படுத்தி பொருளாதாரத்தை உயர்நிலைக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டுமென்ற இலக்கை எட்டுவதற்கு முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அளிதது வருவதாகத் தெரிவித்த அவர், மத்திய அரசின் சார்பில் மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களையும் பட்டியலிட்டார்.

தமிழகத்தில் தற்போது சட்டம் ஒழுங்கு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவ்வப்போது காவல்துறையினர் என்கவுண்டர் நடத்துவது வேதனை அளிப்பதாக திரு எல் முருகன் கூறினார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) -29-- செகண்ட்*

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின் கீழ் பாதுகாப்பு தளவாட உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கான திட்டங்களையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் இறக்குமதி படிப்படியாக குறைந்து ஏற்றுமதி கணிசமாக அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர், இதனால் நாட்டின் அந்நிய செலாவணியும் உயர்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

தேசப்பிதா காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதியன்று மக்கள் கதர் ஆடைகளை அணிய வேண்டுமென்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

உள்நாட்டு பொருட்களை அதிக அளவில் வாங்கி பயன்படுத்துவதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்று திரு எல் முருகன் கூறினார்.

[]<<<>>>[]

அனைத்து மாவட்டங்களிலும் சீரான வளர்ச்சியை உறுதி செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டையில் டாடா மோட்டார்ஸ் வாகன உற்பத்தி தொழிற்சாலைக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், தமிழகத்தில் இந்நிறுவனம் கூடுதலாக முதலீடுகளை செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

நாட்டின் வளர்ச்சியில் தமிழகம் முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது என்று கூறிய அவர், நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழகம் உருவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2030-ஆம் ஆண்டுக்குள் மாநில அரசின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவுக்கு உயர்த்துவதற்கான இலக்கை நோக்கி தற்போது பயணித்து வருவதாக அவர் கூறினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் பத்து லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகக் கூறிய முதலமைச்சர், இதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 31 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று குறிப்பிட்டார்.

*(சவுண்ட்பைட் -மு க ஸ்டாலின் ) -43--- செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவமனையில் எட்டு கோடி ரூபாய் மதிப்பிலான எம் ஆர் ஐ பரிசோதனை கருவி விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவமனையில் இன்று 43 ஒப்பந்தப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசிய அவர், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் கட்டணப் படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

சென்னை, மதுரை., கோவை, சேலம், தஞ்சை போன்ற மாவட்டங்களில் கட்டண படுக்கை அறைகள் தொடங்கப்பட்டுள்ளதகா அவர் தெரிவித்தார்.

கிண்டி தேசிய முதியோர்நல மருத்துவமனையில் 20 கட்டண படுக்கை அறைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும், நாள் ஒன்றுக்கு தொள்ளாயிரம் ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுதாகவும் திரு மா சுப்ரமணியன் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஆளும் திமுக அரசு மின் கட்டணம், சொத்து வரி, குடிநீர் இணைப்புக் கட்டணம் ஆகியவற்றை அதிக அளவு உயர்த்தி மக்களுக்கு சுமையை ஏற்படுத்தி வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், பால் பொருட்களின் விலையும் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் முதல் நியாயவிலைக் கடைகளில் பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்கள் குறித்த நேரத்தில் வழங்கப்படாததால் மக்கள் மிகவும் சிரமப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சென்னை மாநகராட்சி ஆண்டுதோறும் ஆறு சதவீதம் சொத்து வரியை உயர்த்துவது, மயான பூமியை தனியார்மயமாக்குவது தொடர்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், இதனை உடனடியாக திரும்ப்பபெற வேண்டுமென்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

வளிமண்டல சுழற்சி காரணமாக தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்தில் வட உள்மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - வானிலை ) ——28 செகண்ட்*

**[]<<<>>>[]**

திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்காகவும், குடிநீர் பயன்பாட்டிற்காகவும் மாநில அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் இன்று தண்ணீரை திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

மதுரை தமுக்கம் மையத்தில் இன்று சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் சார்பாக தமிழ்நாடு ஸ்டார்ட் அப் திருவிழா-2024 தொடக்கியது.

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உலக ரேபிஸ் தினத்தையொட்டி கால்நடை மருத்துவதுறை சார்பில் செல்லபிராணிகளுக்கான தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மவாட்டம் நாகர்கோவிலில் சர்வதேச காதுகோளாதோர் தினம் மற்றும் இந்திய சைகை மொழி தின பேரணி ஆட்சியர் திருமதி அழகுமீனா தலைமையில் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

காவிரி ஆற்றங்கரையில் ஒரு கோடி பனை மரங்கள் நடும் திட்டத்தின் ஒரு பகுதியாக இன்று தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் ஏழு இடங்களில் இன்று மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

[]<<<>>>[]

தேனி மாவட்டம் சுருணி அருவியில் ஐந்து நாட்கள் நடைபெறும் சாரல் விழாவை ஆட்சியர் திருமதி ஷஜீவனா இன்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

வடகிழக்கு பருவமழையையொட்டி சென்னை மாநகராட்சி பகுதிகளில் இம்மாதம் 30-ஆம் தேதி முதல் மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை சேவைத் துறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் சாலை வெட்டுக்கள் நிறுத்தி வைக்கப்படுவதாக ஆணையர் திரு குமர குருபரன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

பூட்டானில் நடைபெற்ற இப்போட்டியில் நான்கு - இர்ணடு என்ற கோல் கணக்கில் இந்தியா, நேபாளத்தை வென்றது.

[]<<<>>>[]

இந்தியா – பங்ளாதேஷ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக இன்று ரத்து செய்யப்பட்டது.

பங்ளாதேஷ் முதல் இன்னிங்ஸில் மூன்று விக்கெட் இழப்புக்கு 107 ரன் எடுத்துள்ளது.

***<u>End of News</u>***